### கூடுதல் கல்வித்தகுதி உடையவருக்கு

# மெட்ரோ ரெயில் நிர்வாகம் பணி வழங்க மறுத்தது சரிதான்

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜூலை.12-

மெட்ரோ ரெயில் நிறுவனம், நிலைய கட்டுப்பாட்டாளர், இளநிலை பொறியாளர், டிரைவர் பணிகளுக்கு 'டிப்ளமோ' படித்தவர்கள் விண்ணப்பிக்கும்படி அறிவித்தது. கூடுதல் கல்வித்தகுதி பெற்றிருப்பது தெரியவந்தால் பணியை இழக்க நேரிடும் என்று நிபந்தனையும் விதித்தது. இந்த தேர்வில் என்ஜினீயரிங் பட்டம் பெற்ற லட்சுமிபிரபா என்பவர் வெற்றிபெற்ற பின்னர் சான்றிதழ் சரிபார்ப்பின்போது கண்டுபிடிக்கப்பட்டதால் அவருக்கு பணி வழங்க மறுத்தது.

இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் லட்சுமிபிரபா வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.வைத்தியநாதன், "வேலையில்லா திண்டாட்டம் என்று கூறி நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியைவிட கூடுதல் கல்வித்தகுதி உடைய ஒருவர் தனக்கு பணி வழங்க வேண்டும் என்று உரிமைகோர முடியாது. கூடுதல் கல்வித்தகுதி உடையவருக்கு வேலை வழங்க மறுத்தது சரிதான்'' என்று உத்தரவிட்டார்.